பிற அலுவல்களை ஒத்தி வைத்து இதை விவாதிக்க வேண்டுமென்று கோருகிற இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்துக்கு அனுமதி மறுக்கிறேன்.

(ஆ) மதுரையில் சாலையோரங்களில் விளையாட்டுப் பொருள்கள், பழங்கள் முதலியவை விற்கும் ஏழைகளுக்கு அபராதம், தண்டனை விதிப்பதால் ஏற்பட்டுள்ள சீர்குலைவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திருமதி கே. பி. ஜானகி அம்மாள் அவர்கள் மதுரை நகரில் பல்லாயிரக்கணக்கான ஏழை மக்கள் சாலை ஓரங்களில் விளையாட்டுப் பொருள்கள், பழங்கள் போன்றவைகளை சிறு கூடைகளில் வைத்து விற்று வாழ்க்கை நடத்துபவர்களை தினசரி 5, 10 ரூ. அபராதம், தண்டனை, பொருள் விரயம் செய்து ஏழைகளின் வாழ்க்கையை சீர்குலைக்கும் நிலையைப் பற்றி விவாதிக்க ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறுர்கள்.

இது அரசாங்கத்தின் அன்ருட அலுவல்களுக்கு உட்பட்ட நிகழ்ச்சியாதலால் இந்த ஒற்றி வைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கிறேன்.

5. வினக்களுக்கு விரைவாக விடையளிப்பது குறித்து பேரவைத் தலைவரின் விளக்கம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹாண்டே அவர்கள் மேலவையிலே விரைவாக விடை வருகிறது இங்கு வரவில்லை என்று குற்றம் சொன்னுர்கள். அந்த நிலைமையை விளக்கி விட விரும்புகிறேன். திரு. ஹாண்டே அவர்கள் என்ன பொருள் பற்றித் தீர்மானம் கொடுத்தார்களோ, அது பற்றி மேலவை உறுப்பினர் ஒருவரால் 2—10—1969 அன்று கேள்வி கொடுக்கப்பட்டது. அந்தக் கேள்வி மீண்டும் 8—5—1970-லே புதுப்பிக்கப்பட்டது. அந்த 23—10—1969 அன்று கொடுக்கப்பட்ட கேள்விக்கு 10—4—1970 விடை வந்து விட்டது. 18—5—1970-ல் மீண்டும் புதுப்பிக்கப்பட்ட கேள்விக்கு 31—7—1970-ல் விடை தரப்பட்டது. அந்த விடை மேலவையில் 27—8—1970-ல் கொடுக்கப்பட்டது.

இங்கே டாக்டர் ஹாண்டே அவர்கள் 10—8—1970-ல் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்தார்கள். அது 14—8—1970-ல் இலாகாவுக்கு அனுப்பப்பட்டது: அதற்கு விடை அரசிடமிருந்து 27—8—1970 அன்று கிடைத்தது. அதை இந்த அவையில் 29—8—1970-ல் கொடுத்திருக்கிறேம். ஆகவே, இதில் எந்தவிதமான தாமதமும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

6. கவன ஈர்ப்பு.

குடியாத்தம் மருத்துவ மனையிலும், கல்லப்பாடி ஆரம்ப சுகாதார நிலையத்திலும் மருந்தின்மையால் மக்கள் அல்லல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள் விதி 41 கீழ் மாண்புமிகு கல்வி,

சுகாதார அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு உடனடி பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு காரியத்தைக் கொண்டு வருவார்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன்: சட்டப் பேரவையில் 41-வது விதியின் கீழ் அவசரப் பொது முக்கியமான காரியத்தை, கல்வி சுகாதார அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

"குடியாத்தம் மருத்துவ மனையிலும், கல்லப்பாடி பிரைமரி மருத்துவ மனையிலும் மருந்து இல்லாமல் மக்கள் படும் கஷ்டங்களைப் பற்றி சர்க்கார் உடனடியாக தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்".

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அரசு மருத்துவ மனைகளுக்கும் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் தேவையான மருந்துகளை மருத்துவப் பண்டகசாலை வழங்குகின்றன. இதற்காக ஆண்டு தோறும் தேவைப்படும் மருந்துகள் பற்றிய பட்டியல் தயாரிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட துறைத் தலைவர் மூலமாக மருத்துவப் பண்டகசாலைக்கு அனுப்பப்படுகிறது. மருத்துவப் பண்டகசாலையில் கிடைக்காத மருந்துகள் அவற்றை ஒப்பந்த வீதத்தில் வழங்க இசையும் நிறுவனங்களிடமிருந்து பெறப்படுகிறது.

மருத்துவப் பண்டகசாலைகளினல் வழங்கப்படாத அல்லது மருத்துவ விற்பனை நிறுவனங்களினல் ஒப்பந்த வீதங்களில் வழங்கப் படாத மருந்துகளைத் தத்தம் நிறுவனங்களில் போதிய அளவில் வாங்கி இருப்பில் வைத்துக் கொள்ளுமாறு மாவட்ட மருத்துவ அதிகாரிகளுக்கும், மாவட்டச் சுகாதார அதிகாரிகளுக்கும் சுகாதாரப் பணிகள் குடும்ப நலத் திட்ட இயக்குநர் கட்டளையிட்டுள்ளார். அவசியமான இடங்களில் தொகை மீது ஒதுக்கம் செய்யப்படுவதன் மூலம் இந்த மருந்துகளுக்கான செலவுத் தொகை அவற்றிற்கு அளிக்கப்படுமாதலால் மருத்துவ நிறுவனங்கள் தங்களுக்கு வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள தொகையோடு மருந்து வாங்குவதை நிறுத்திக் கொள்ள வேண்டாமென்று இயக்குநர் அவர்களுக்குத் தெரிவித்துள்ளார். ரூ. 200 வரையில் உள்ளூரிலேயே மருந்துகளை வாங்கிக் கொள்ள மருத்துவ அதிகாரிகளுக்கு அதிகாரம் அளிக்கப் பட்டுள்ளது. இதற்கு முன்பு ரூ. 50 வரையில்தான் அவர்கள் உள்ளூரில் மருந்துகள் வாங்க இயலும். பொதுமக்கள் புகார் செய்யும் நிலை உருவாவதற்கு அவர்கள் இடமளித்தாலும், திட்டவட்டமான புகார் எதுவும் தமது நாட்டத்திற்குக் கொண்டு வரப்பட்டாலும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமென்று சுகாதாரப் பணிகள்—குடும்ப நல இயக்குநர் மாவட்டச் சுகாதார அதிகாரிகளுக்கும், மாவட்ட மருத்துவ அதிகாரிகளுக்கும் எச்சரிக்கை விடுத்துள்ளார். தங்கள் கீழுள்ள மருத்துவ அதிகாரிகள் அனைவருக்கும் இத்தகைய கட்டளைகளைப் பிறப்பிக்குமாறும், இக்கட்டளைகள் கண்டிப்பாக நடை முறையில் பின்பற்றப்படுகின்றனவா என்று பார்த்துக் கொள்ளுமாறும் அவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் கடந்த 4 அல்லது 5 திங்கள்களில் அவர்களுக்கான செலவுகளின் அடிப்படையில் அமைய வேண்டுமென்று அவர்களுக்கு அறிவித்துள்ளார். "மருந்துகள் பிற

அவசியமான பொருட்கள் " என்ற கணக்குத் தலைப்பின் கீழ் திங்கள் தோறும் ஆகிவரும் செலவை உன்னிப்பாகக் கவனித்து வருமாறும் அவசியமான இடங்களில் மறு நிதி ஒதுக்கம் செய்யுமாறும், உரிய காலத்தில் துணை மானியக் கோரிக்கைகளில் மேலும் நிதி ஒதுக்கம் செய்வதற்காக அரசுக்கு எழுதுமாறும் தமது அலுவலகக் கணக்குப் பிரிவுகளுக்குச் சுகாதார பணிகள்–குடும்ப நல இயக்குநர் கட்டளை யிட்டுள்ளார்.

ஆரம்பச் சுகாதார நிலையங்கள் அனைத்துக்கும் இன்றியமை யாத மருந்துகள் அனைத்தும் வழங்கப்படுவதற்கு வகை செய்யும் பொருட்டும், மருந்துகள் இல்லாத நிலை இயல்பாக உறுவாகாமல் தடுப்பதற்கும் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கான மருந்துகள் குறித்த தேவைப் பட்டியல்களை ஒரே தரமாக்கும் செயற் குறிப்பு உள்ளது. மருத்துவ நிலையங்கள் அனைத்துக்கும் தேவையான மருந்துகள் வழங்கப் படுவதற்குச் சாத்தியமான நடவடிக்கைகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வட ஆற்காடு மாவட்ட மருத்துவ அதிகாரி தாம் அண்மையில் குடியாத்தம் அரசு மருத்து மனையைச் சென்று பார்வையிட்டதாகவும், மருந்துகளில் இருப்பு நிலையைச் சோதித்ததாகவும் தெரிவித்துள் ளார். இன்றியமையாத மருந்துகள், உயிர் காப்பதற்கான மருந்து கள் உட்பட மருந்துகள் அனைத்தும் போதுமான அளவில் அந்த மருத்துவ மனையில் இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

கல்லப்பாடி, ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருந்துகள் போதிய அளவிலும், மன நிறைவளிக்கும் வகையிலும் இருப்பிலுள்ள தாக வட ஆற்காடு மாவட்டச் சுகாதார அதிகாரியினால் சரிபார்க் கப்பட்டுள்ளது.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், 10, 15 ஆண்டுகளுக்கு முன்னால் 60 ஆயிரம் ஜனத்தொகை கொண்ட குடியாத்தத்திற்கு வருடம் ஒன்றிற்கு 40 ஆயிரம் ரூபாய் மருந்துகள் வாங்குவதற்காக ஒதுக்கப்பட்டது. அன்றைக்கு இருந்த விலை என்ன? இன்றைக்கு விலை என்ன? அதிலே மருந்துகளுக்காக என்று 6 ஆயிரம் 7 ஆயிரம் ரூபாயில் இதரப் பொருட்கள் வாங்கப்படுகிறது. இன்பேஷன்ட், அவுட் பேஷண்ட் இருக்கிறார்கள். இன்பேஷண்டுக்கு 10 பைசாவும், அவுட் பேஷண்டுக்கு 6 பைசாவும் கொடுக்கப்படுகிறது. காலஞ் சென்ற முதலமைச்சர் அவர்களிடத்திலே நான் இதைப் பற்றி விளக்க மாக எடுத்துச் சொல்லியிருக்கிறேன்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கோரிக்கை கொடுத்து இருக்க லாம், அதைப்பற்றி இப்பொழுது பிரச்சினை இல்லை, விரும்பினால் விளக்கம் கேளுங்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன்: டி.எம்.இ. அவர்கள் எழுதி யிருக்கிற அறிக்கையே முழுக்க முழுக்க உண்மையில்லை. அதை விளக்கிச் சொல்லவேண்டும்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கொடுத்திருக்கிற அறிக்கையின் மீது விளக்கம் கேட்பதுதான் இப்பொழுது. அவர்கள் கொடுத்த அறிக்கையை மறுத்துப் பேசுவதற்கு இதுவல்ல நேரம்.

திரு. வி. கே. கோதண்டராமன் : வேறு நேரம் இல்லை. அந்தப் பணத்தை அதிகப் படுத்துவதற்கும், கல்லப்பாடி மருத்துவ மனைக்கு ரயில்வே இன்வாய்ஸ் அனுப்பப்பட்டிருக்கிறது. மெட்ராஸ் மெடிக்கல் ஸ்டோர்ஸ் என்ற பெயரிலே மத்திய சர்க்கார் அதிகாரத்தின் கீழ் இருக்கக் கூடிய ஸ்டோரிலிருந்து......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதி என்ன சொல்லியிருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். அமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். அதன் மேலே ஒன் ஆர் டு குவஸ்டின்ஸ் கேட்கலாம் என்றுதான் இருக்கிறது. அதை நல்ல முறையிலே நீங்கள் பயன்படுத்தவில்லை. ஏதாவது அதைப்பற்றி மறுத்துப் பேச வேண்டுமென்றால் மானியக் கோரிக்கையின் மீது நீங்கள் பேசும் பொழுது பேசலாம். உங்கள் கட்சிக்காரர்களைப் பேசச் சொல்லலாம்.

திரு. வி. கே. கோதண்டராமன் : அமைச்சரவையை மிஸ்லீட் பண்ணுவதற்கு அறிக்கை தந்திருக்கிறார்கள். இந்த நேரத்திலேயே அதை விளக்கிச் சொன்னால்தான்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மறுபடியும் மறுபடியும் அதையே சொன்னால் நான் விளக்கம் கேட்பதற்குக் கூட இடம் கொடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டுவிடும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : இதுவரையிலும் மருந்து கிடையாது, ஆகவே ரிப்போர்ட் வந்திருக்கிறது. தவறான ரிப்போர்ட்டின்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? மெட்ராஸ் மெடிக்கல் ஸ்டோர்ஸை ஸ்டேட் கவர்ன்மெண்ட் எடுத்து நடத்துவதற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாவட்ட மருத்துவ இயக்குநரும், சுகாதார இயக்குநரும் கொடுத்திருக்கிற அறிக்கையியின் அடிப்படையிலே விளக்கம் தந்தேன். அதை மறுத்துரைப்பதற்குக் காரணங்கள் இருக்கின்றன என்று உறுப்பினர் சொன்னார்கள். அதைப்பற்றி கேள்வியை எழுப்பினால் விளக்கங்கள் பெற நடவடிக்கை எடுக்கலாம். தவறு இருந்தால் நடவடிக்கை எடுக்க அரசு தயாராக இருக்கிறது.